**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.1255/ஆ5/2024, நாள். 25.06.2024**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளிகளில் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த – பள்ளிகளில் போதைப்பொருள் தடுப்பு குழு உருவாக்கம் – தொடர்பாக

பார்வை
1. Home Prohibition and Excise Department, Secretariat, Chennai D.O. Letter No . 15438/P&E.XVI(2)/2022-2, Dated. 06.06.2024
2. School Education Department, Secretariat, Chennai -6 Letter No. 13185/Se5(1)/202-20, Dated. 15.06.2024
3. Chennai – 6, Director of School Education Letter R.C. No. 037289/M/S1/2024, Dated. 24.06.2024

•••••

பார்வை 2-ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்திற்கிணங்க, பள்ளி மாணவர்களிடையே போதைப் பொருள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் பள்ளிகளில் போதைப்பொருள் எதிர்ப்பு கிளப்புகள் ( Anti – drugs clubs) செயல்பட்டு வருகிறது. 2023-2024ஆம் ஆண்டில் பள்ளிகளில் சிறந்த 3 போதைப்பொருள் எதிர்ப்பு கிளப்புகளுக்கு மாவட்ட மற்றும் மாநில அளவிலான விருதுகள் தேர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும், முதல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட மாவட்ட அளவிலான கிளப்புகள் மாநில அளவிலான விருதுகளுக்கு பரிசீலனைக்கு அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மாணவர்களை தன்னார்வ திட்டத்திற்கு ஊக்குவிக்கும் வகையில், போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பள்ளிகளிலும் தன்னார்வத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. தன்னார்வ திட்டத்தில் பொதுமக்களுக்கு போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பள்ளிகளில் இப்பொருள் சார்பாக போட்டிகள் நடத்துதல், துண்டு பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் விநியோகம் செய்தல், கலாச்சார நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்பட வேண்டும். எனவே, 26.06.2024 அன்று போதைப்பொருளுக்கு எதிரான சர்வதேச தினம் ' World Drug Day" அனுசரிக்கும் பொருட்டு பள்ளி மாணவர்களிடையே போதைப் பொருள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மேற்காண் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அதன் புகைப்பட அறிக்கையினை இவ்வலுவலக b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவிட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Sheet Link-ல் விவரங்கள் தவறாமல் பூர்த்தி செய்யுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**The theme for this year is " The evidence is clear; invest in Prevention".**

இணைப்பு – பார்வையின் கடித நகல்
Google Sheet Link –
https://docs.google.com/spreadsheets/d/17AhAQP5NaB5iJ_73QNP2tkzTD8EPOIp4-yIvNCeEuiQ/edit?usp=sharing

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்
1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
   மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி)
2. வேலூர் மாவட்டம், (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு) இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக
3. உதவி திட்ட அலுவலர்,
   உதவி திட்ட அலுவலகம்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.